


# நான் காஸ்ட்லி குருவா?



● த.செ.ஞானவேல்

*சென்ற இதழ் தொடர்ச்சி...*

கிராம மக்களுக்காக ஈஷா சார்பில் கட்டப்பட்டுள்ள சிறிய மருத்துவமனையின் திறப்புவிழா அது. சமூகத்தின் பெரிய மனிதர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்கள். 'இப்போது சிறியதாக இருக்கலாம். விரைவிலேயே இந்த மருத்துவமனை பல மடங்கு வளர்ச்சியடைந்து பெரியதாகவேண்டும்' என்று எல்லோரும் வாழ்த்த, மக்கள் கைதட்டி மகிழ்கிறார்கள். சிறப்புரை நிகழ்த்த வருகிறார் சத்குரு ஜக்கி வாசுதேவ். 'எந்த நாட்டிலும் மருத்துவமனைகள் பெரிதாக வளரக்கூடாது. மக்கள் ஆரோக்கியமாக இருந்துவிட்டால் பெரிய மருத்துவமனைகளுக்கு அவசியமே இல்லை...' என்று அவர் பேசும்போது மக்களுக்கு நிஜம் புரிந்து கைதட்டுகிறார்கள். இதுதான் ஜக்கி வாசுதேவ். சமூகத்தின் அடர்ந்த இருளுக்குள் தன் ஒவ்வொரு சொல்லாலும் செயலாலும் ஒரு மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கிறார் ஜக்கி. வெளிச்சம் நிரம்பி வழியும் சிந்தனைகளோடு தொடர்கிறார்...

***லாபம் இல்லாத மருத்துவமனை, பள்ளிகள் கட்டுவதெல்லாம் அரசின் வேலை. அதை ஒரு ஆன்மிக இயக்கம் செய்வதன் நோக்கம் என்ன?***

ஜனநாயகம் என்றால், 'எல்லாமே மக்கள்' என்று அர்த்தம். மக்களை வழிநடத்தும் அரசாங்கத்தை அமைப்பதும் மக்களின் வேலைதான். 60 ஆண்டுகள் கடந்த சுதந்திர இந்தியாவில் பல காரணங்களால் அரசு மக்களுக்கு வேண்டியதைச் செய்ய முடியவில்லை. இந்நிலையில் இரண்டே காரியங்கள்தான் நம்மால் செய்யமுடியும். எழுந்து நின்று மக்களுக்காக ஏதாவது செய்வது; அல்லது உட்கார்ந்து கொண்டு அனைவர்மீதும் புகார் சொல்வது. நான் முதல் வேலையை என்னுடையதாக எடுத்துக்கொண்டேன்.

***மக்களுக்கு நன்மை செய்ய அரசியலுக்கு வர வேண்டிய தேவை இருந்தால் தேர்தலில் நிற்பீர்களா?***

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதியாக செய்வதைவிட, ஒரு யோகியாக என்னால் இன்னும் நிறைய செய்ய முடியும். ஆன்மிகவாதி அரசியல்வாதியாக வேண்டிய சூழல் எதுவும் இப்போது இல்லை. அரசியல்வாதிக்குத்தான் ஆன்மிகம் தேவைப்படுகிறது.

***பிறருக்கு உங்களின் அதிக நேரத்தை தர்றீங்க. உங்க மகளுக்கு அப்பாவா நேரம் தர முடியுதா?***

'நீங்க உங்களுடைய எல்லா ரோலையும்



நிறைவா செய்றீங்கப்பா' என்பது என் மகளின் வார்த்தைகள். உணவு, உடை, தங்குமிடம், படிப்பு போன்றவற்றைச் செய்வது மட்டும் பெற்றோரின் கடமை இல்லை. சுதந்திரமாக குழந்தைகள் சிந்திக்கவும் செயல்படவும் தேவையான சூழலை அமைத்துத் தருவது முக்கியம். அதை நான் சிறப்பாகவே செய்கிறேன்.

***உங்கள் உடை, கார், ஷூ, கண்ணாடியெல்லாம் பார்த்து இந்தக் கேள்வி. நீங்க காஸ்ட்லி குருவா?***

வாழ்வின் பல இடங்களில் பல பாத்திரங்களை நான் வகிக்க வேண்டியிருக்கிறது. அதற்குத் தேவையான உடைகளை, பொருள்களை உபயோகிக்கிறேன். என்னிடம் உள்ள லேண்ட்ரோவர் கார் காஸ்ட்லியானதுதான். ஆனால் அது அவ்வளவு வசதியானது இல்லை. ஈஷாவின் பணிகள் குண்டும் குழியுமாக சாலை வசதிகளற்ற நம் கிராமங்களில் இருக்கின்றன. எல்லா இடங்களுக்கும் சென்றுவர அந்தக் கார் தேவையாக இருக்கிறது.

நான் மட்டுமல்ல... எனக்கு முன்பிருந்த குருக்களும் தங்களைச் சுற்றியுள்ளவற்றைப் பார்த்து அச்சப்பட்டது இல்லை. உடை, கண்ணாடி, கார், ஷூ போன்றவை என் ஆன்மிகத்தைத் தொந்தரவு செய்யும் பலவீனத்தில் நான் இல்லை. அரண்மனையில் தங்கும்போது அது என்னை உயர்த்துவதோ, குடிசையில் தங்கும்போது அது என்னைத் தாழ்த்துவதோ இல்லை. இவை எதுவும் என்னை கீழே இறக்கிவிடாது. என் சூழலுக்கு தேவையானவற்றைத்தான் பயன்படுத்துறேன்.

நல்ல உடை உடுத்தாமல், சிறந்த உணவு உண்ணாமல், நல்ல இடத்தில் தங்காமல் இருப்பதுதான் ஆன்மிகம் என்று பலரும் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வெளியில் இருப்பவை எதுவும் உள்ளே மாற்றதைக் கொண்டுவந்துவிடாது. உங்களுக்குள் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதுதான் ஆன்மிகம். அது வெளிப்புறத்தில் இருப்பவற்றோடு சம்பந்தப்படுவதில்லை. ஆன்மிகம் பற்றிய இந்த தவறான கருத்தால்தான் பலர், 'ஆன்மிகம் நடைமுறை வாழ்வுக்கு சாத்தியமற்றது' என்று நினைத்துவிடுகிறார்கள்.

***நாட்டில் மதங்களின் பெயரால் நிகழும் தீவிரவாதம் பற்றி..?***

எல்லா மக்களுக்கும் சமமான வாய்ப்பு பொருளாதாரத்தில், கல்வியில் வழங்கப்பட்டால்தான் தீவிரவாதத்தை ஒழிக்க முடியும். நாட்டில் எல்லா சமூகத்தினரும் இப்போதுதான் பொருளாதார வளர்ச்சியைப் பார்க்கிறார்கள். முதல் தலைமுறையாகப் படித்த குழந்தைகள் வேலைக்குச் சென்று நிறைய சம்பளம் பெறும் பொருளாதாரம் இப்போதுதான் வாய்த்திருக்கிறது. சில முட்டாள்தனமான வழிகாட்டுதலால் தீவிரவாதத்தின் பெயரில் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கிறார்கள். வீதியில் குண்டெறிந்து அப்பாவி மக்களை, குழந்தைகளைக் கொல்கிற உரிமை யாருக்குமே கிடையாது. அவர்களை அரசு கடுமையாக ஒடுக்கவேண்டும். தீவிரவாதத்திற்குப் பின்னால் எந்த மதம் இருந்தாலும், எந்த அரசியல் இருந்தாலும், பயப்படாமல் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது என் உறுதியான வார்த்தைகள்!

***நீங்கள் இந்துக்களின் குருவா?***

நான் யோகி. சாதி, மதம், மொழி என்கிற குறுகிய எல்லைகள் எனக்குக் கிடையாது. ஐரோப்பிய பின்னணியில் பேண்ட்–சட்டை அணிந்தால் மதச்சார்பற்றவன் என்றும்,

வேட்டி கட்டி டர்பன் தலைக்கு வைத்து இந்திய அடையாளத்தோடு இருந்தால் மதச்சார்புடையவன் என்றும் கூறுவது அபத்தம். மீடியாக்கள் தொடர்ந்து இந்த வேலையைச் செய்து வருகின்றன. வேட்டி நான் பிறந்த நாட்டின் அடையாளம். கலாசாரத்தின் அடையாளம்.

உங்களின் 'இந்து' என்கிற கேள்விக்கு வருகிறேன். 'இந்து' என்பது மதத்தின் அடையாளம் இல்லை. நிலத்தின் அடையாளம். 'இண்டஸ்' என்கிற நிலப்பரப்பில் பிறந்த அனைவரையும் 'இந்து' என்று சொல்வது வழக்கம். இப்போது அது மத அடையாளமாக தவறாக வழங்கப்படுகிறது. உலகம் வண்ண மயமாக இருக்கிறது. அதை நாகரிகம் என்கிற பெயரில் ஒற்றைத்தன்மையாக்கிவிட வேண்டாம். நம்முடைய நடை, உடை, பேச்சு எல்லாவற்றிலும் 'இங்கிலீஷ்தனம்' இருக்கிறது. நான் வேட்டி உடுத்துவது இந்துவாக இருப்பதற்கு அல்ல. இந்தியனாக இருப்பதற்கு!

யானை, குரங்கு, கரடி, பாம்பு எது கிடைத்தாலும் இங்கு மனிதன் அவற்றை வைத்து பிச்சையெடுக்கிறான். உடனே அது மத அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. அது பசியின் அடையாளம் என்று புரிந்து கொள்கிறவர்கள் யாரும் இல்லை. எல்லோரும் யானையைப் பார்க்கிறார்கள். அந்த மனிதனின் வயிற்றைப் பார்க்கத் தயாராக இல்லை. எனக்கு மதம் முக்கியம் இல்லை. மனிதனின் பசிதான் முக்கியம்.

***உங்கள் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வியைத்தானே நடைமுறைப் படுத்துறீங்க?***

*300* ஆண்டுகளாக பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்த நாம் இப்போதுதான் மேலே வரத்தொடங்கியிருக்கிறோம். அந்த வளர்ச்சியை ஆங்கிலம்தான் சாத்தியப்படுத்தியிருக்கிறது. உலக வர்த்தகத்தின் மொழி ஆங்கிலமாகத்தான் இருக்கிறது. உலகத்தில் ஆங்கிலம் தெரிந்த மக்கள்தொகை அதிகமாக இருக்கிறது. சீனா, ஜப்பான், பிரான்ஸ் போன்ற நாடுகளும் இப்போது இதை ஒப்புக்கொண்டு அவர்களின் பிள்ளைகளை ஆங்கிலம் கற்க அனுமதிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் கல்வி வந்தால் தமிழ் போன்ற மொழிகளுக்குப் பின்னடைவு ஏற்படும் என்று நினைப்பது தவறான கருத்து. அந்த அளவு நமது மொழியும், பண்பாடும் பலவீனமானது அல்ல.

ஆங்கிலக் கல்வி வேலைவாய்ப்போடு சம்பந்தப்படுகிறது. நம்முடைய கிராம மக்களுக்கும் ஆங்கிலத்தை அந்நியப்படுத்தியதன் மூலம் வளர்ச்சியிலிருந்து அவர்களையும் அந்நியப்படுத்திவிட்டோம். *70%* பேர் ஆங்கிலம் தெரியாததால் வேறுவழியின்றி விவசாயம் பார்க்கிறார்கள். *100* பேர் சாப்பிட *70* பேர் உணவு உற்பத்தி செய்கிற அவலம் இங்குதான் இருக்கிறது. *10* பேர் சாப்பிட *7* பேர் சமைப்பது சரியா? அதற்கு இரண்டுபேர் போதும். மற்றவர்கள் வேறு வேலை பார்க்கலாம். அதற்கு ஆங்கிலம் அவசியம். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இதுதான் யதார்த்தம்.

***நம்முடைய பலம், பலவீனம் எது?***

நமக்கு தலைமுறைகளைத் தாண்டி தொலைநோக்கோடு சிந்திக்கத் தெரியவில்லை. எது நம்முடைய பலமோ அதையே பலவீனமாக்கி வைத்திருக்கிறோம். இன்றும் உலகத்தின் ஆன்மிகத் தலைமையகம் இந்தியாதான். தொழில்நுட்ப வளர்ச்சியோ, விஞ்ஞான வளர்ச்சியோ நம்மிடம் போதுமான அளவு



இல்லை. புறத்தில் உலக நாடுகள் வளர்ந்திருந்தாலும் அகத்தில் இன்னும் தடுமாற்றம் இருக்கிறது. அதை ஈடு செய்யும் பூமியாக இந்தியாவின் ஆன்மிகம் இருக்கிறது. யோகா என்கிற கலையை, உள்சக்தியை மீட்டெடுத்து புத்துணர்வு தரும் அற்புதத்தை நம் முன்னோர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். உலக நாடுகளில் இன்று *5* கோடி மக்கள் யோகப்பயிற்சி செய்கிறார்கள். மற்றவர்கள் அற்ப விஷயத்திற்குக்கூட காப்பிரைட் வாங்கி பொருளாதாரத்தில் பலமாக இருக்க, நாம் அற்புதக் கலையை வைத்துக்கொண்டு ஏழ்மையில் உழலுகிறோம். யோகக் கலையைக் காப்பிரைட் செய்து உலக வர்த்தக சந்தையில் சரியாக மார்க்கெட்டிங் செய்தால் அதில் கிடைக்கிற பணத்தை மட்டுமே வைத்து நம் நாட்டை நடத்திவிட முடியும். நம்மிடம் இருக்கிற 'உள் சக்தி' நமக்குப் பெரிய பலம். ஆனால், அதை ஒன்று திரட்டி நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தத் தெரியாமல் இருப்பது நம்முடைய பெரிய பலவீனம்!

***உணர்ச்சிகளைத் தன் வசப்படுத்தி ஈர்ப்பான பதில்களைக் கொட்டுகிறார் சத்குரு. அவரின் எண்ணங்கள் அழகு. அவரின் செயல்கள் பேரழகு. நிமிர்ந்தே எரியும் மெழுகுவர்த்தியின் சுடரைப் போலவே ஜக்கியும் பிரகாசமாக இருக்கிறார்!***

படங்கள்: புதூர் சரவணன்